**மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம் - 2020**

மின்சார வழங்கல் நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 3409-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளன. மின்சார வழங்கல் மற்றும் விநியோக முறைமைகளின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 23,068.80 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 160.20 மில்லியனானதுடன் அதில் ரூபா 16,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 115 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. ரூபா 6,508.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45.2 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் மற்றும் அதனது காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நயினாதீவில் முன்மொழியப்பட்ட மின்நிலையத்திற்கான காணியை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 2.86 | காணி கொள்வனவு தொடர்பாக ஏற்பட்ட ரூபா 2,860,000 ஆரம்ப செலவினங்கள் காணி சுவீகரிப்பு பூர்த்தியடையும் வரை நடைமுறை வேலை கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | சரியான கணக்கீட்டு பதிவு முறை பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்திற்காக பொருத்தமான காணி கொள்வனவு செய்யப்பட்டதை இனங்கண்ட பின்னர் காணிகளின் மதிப்பீடு மற்றும் அளவைக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு நடைமுறையல்லா சொத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிலாக இத் தொகை மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டு நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | 0.76 | பொதி 4 இன் நிர்மாணத்திற்காக ஏற்பட்ட மொத்த கிரயம் பொதி 4 பூர்த்தி செய்யப்படுவதுடன் மூலதனமாக்கப்படும். | சரியான கணக்கீட்டு பதிவு முறை பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | நடைமுறை வேலை கூற்றின் கீழ் மூலதனச் செலவினமாக ஒரு தொகை பதிவு செய்யப்பட்டுள்ளது. கணக்காய்விற்கு எந்தவொரு ஆதார ஆவணங்களும் வழங்கப்படாததால் செலவினத்தின் வகை/ தன்மையை சரிபார்க்க முடியாதிருந்தது. | 163.23 | 2021.05.13 இல் 2020 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்ததுடன் சேர்த்து அனைத்து ஆதாரப்படுத்தும் ஆவணங்களும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு வழங்கப்பட்டன. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருக்கும் தன்மையை உறுதிப்படுத்தி கணக்காய்விற்கு சான்றாதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்திட்ட நிதியில் இருந்து ஏற்பட்டதாக காட்டப்படும் தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 0.17 | இலங்கை மின்சார சபையின் கொள்கையின் பிரகாரம் ரூபா 30,000 இற்கு குறைவாக தளபாடங்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக ஏற்படும் எந்தவொரு செலவினமும் கிரயமொன்றாகக் கருதப்படுகிறது, எனவே மூலதனமாக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை மின்சார சபையினால் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தை | 305.60 | CEB ஆல் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்திற்கான பட்டியல் | செயற்திட்டம் கணக்காய்வாளர்களு |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வு செய்வதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | 2021.07.28 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | க்கு போதுமானதும் பொருத்தமானதுமான சான்றாதாரங்களை வழங்க வேண்டும். |
| (ஊ) | செலாவணி இலாபம் மற்றும் நட்டம் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் தனித்தனியாக காட்டப்படுவதற்கு பதிலாக கடனுடன் கூடிய வட்டியின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | 14.71 | 2020/12/31 இல் நிதிக்கூற்றுக்களின் "E-8300 நாணயமாற்று இலாப/ நட்ட கணக்கு" இன் கீழ் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டது. | பயன்படுத்துநர்களுக்கு சரியான தகவலை வழங்குவதற்கு வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.2 தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள்

| பேரேட்டுக் கணக்கு | தொகை ரூபா மில்லியன் | தீர்ப்பனவு செய்யப்படாத காலப்பகுதி | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு தனியார் நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை 2 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்தது. | 25.22 | 2 ஆண்டுகளிற்கு மேல் | சுமுகமான பேச்சுவார்த்தைக்கு காலம் எடுத்ததால் தாமதம் ஏற்பட்டது. | குறைபாட்டு பொறுப்பு கால நட்டங்களை (liquidated damages) அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் வழங்கப்பட்ட 2018 செப்தெம்பர் 18 ஆம் திகதிய பிஈடி 01/2018 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | செயற்திட்டத்தின் தேவைப்பாட்டை தெளிவாக இனங்காணாமல் செயற்திட்டங்களுக்காக ரூபா 46.8 மில்லியன் மற்றும் ரூபா 153.5 மில்லியன் கிரயத்தில் முறையே இரண்டு விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் பதினாறு நான்கு சக்கர கெப்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு ஒதுக்குவதற்கு CEB வாகனங்களை கொண்டிருக்கவில்லை, சில வாகனங்கள் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சில் நிறுவப்பட்ட குழுவின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் செயற்திட்ட நோக்கெல்லையின் கீழ் வழங்கப்பட்டன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிகாட்டல் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய பிஎவ்டி/ஆர்ஈடி/03/03/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் 3.1.7 மற்றும் 3.2.7 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |
| (ஈ) | நிதியமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட 2016 யூன் 10 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | செயற்திட்டத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | CEB இன் உள்ளக கணக்காய்வு பிரிவு ஒட்டுமொத்த கணக்காய்வுகளை மேற்கொள்ளுகிறது. ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் உள்ளக கணக்காய்வாளர் CEB இல் நியமிக்கப்படுவதில்லை. | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் CEB இன் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (உ) | ADB தேவைப்பாடு | கடன் கைச்சாத்திடப்பட்டு 03 மாதங்களுக்குள் முழு நேர திறைசேரி முகாமைத்துவ நிபுணரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு கணக்காய்வு திகதி வரையிலும் செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | CEB இன் திறைசேரி முகாமைத்துவப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் திறைசேரி முகாமைத்துவ நிபுணர் CEB இல் நியமனம் செய்யப்படுவதில்லை. | ADB தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (ஊ) | ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகளின் VIII ஆம் பிரிவின் 27.1 ஆம் உட்பிரிவு | குறைபாட்டு பொறுப்பு கால நட்டங்களை கோருவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விநியோக பிரிவு 02 குறித்த இரண்டு மீதிகளையும் தாமதமான விநியோக கட்டணங்களாகக் கருதி 2021 ஆம் நிதியாண்டில் பதிவு | ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுடன் இணங்க வேண்டும். |

செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்திருந்தது. இணக்கமான பேச்சுவார்த்தைக்கு காலம் எடுத்ததன் காரணமாக தாமதம் ஏற்பட்டது.

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் காற்றாலை, சூரிய சக்தி, வினைத்திறனான டீசல் மின்பிறப்பாக்கிகள் மற்றும் battery சேமிப்பு ஆகியவற்றைக் கொண்ட கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைமைகளை நிறுவி வட மாகாணத்தின் யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவு மற்றும் அனலைதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய மூன்று தீவுகளில் உள்ள கிராமப்புற சமூகங்களுக்கு செயற்திறனான எரிசக்தி பயன்பாட்டிற்கு உதவுதல், கிராமப்புற மின்மயமாக்கல் வலையமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் விநியோக செயலாற்றல் கண்காணிப்பை மேம்படுத்துதல் உட்பட நடுத்தர மின்னழுத்த வலையமைப்பின் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் பன்னிபிட்டிய மற்றும் பியகம பரிமாற்றல் முறைமையில் எதிர்வினை மின்சக்தியை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக 04 முக்கிய கூறுகளின் கீழ் செயற்திட்ட செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், உரிய செயற்பாடுகள் பட்டியலிடப்பட்ட திகதியான 2016 யூலை 31 இலிருந்து ஒரு வருடத்திற்கும் மேலாக கணிசமான தாமதத்துடன் தொடங்கப்பட்டதுடன் தாமதத்தை நிவர்த்திசெய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் செயற்பாடுகள் தொடரப்பட்டன.

**3.2 செயற்திட்ட நடவடிக்கைகளை தொடங்குவதில்/ அமுல்ப்படுத்துவதில்/ பூர்த்தி செய்வதிலுள்ள தாமதங்கள்**

| இல. | செயற்பாடு | தொடங்கப்படுவதற்கு/ அமுல்ப்படுத்தப்படுவதற்கு/ பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட திகதி | தொடங்கப்பட்ட/ அமுல்ப்படுத்தப்பட்ட/ பூர்த்தி செய்யப்பட்ட திகதி | தாமதம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | அனலைதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய மூன்று சிறிய தீவுகளில் கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைமைகளை நிறுவுதல் | செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் வட மாகாணத்தில் அனலைதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு ஆகிய இடங்களில் கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முறைமைகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2016 ஆம் ஆண்டின் 3 | 2020 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கவில்லை. நயினாதீவில் உள்ள காணி மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் வழங்குவதற்கு பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 4½ ஆண்டுகளுக்கும் மேற்பட்டிருந்ததுடன் செயற்பாடுகளை தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 3¼ | TEC அறிக்கை SCAPC இற்கு சமர்ப்பிக்கப்படுகிறதுடன் குழுவின் தீர்மானம் நிலுவையாக உள்ளது. எனவே, ஒப்பந்தம் வழங்குவது தாமதமடைகிறது. | மேலதிக தாமதமின்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆம் காலாண்டில் வழங்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்த நடவடிக்கைகள் 2017 இன் 4 ஆம் காலாண்டில் தொடங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. | | ஆண்டுகளுக்கும் மேற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நடுத்தர மின்னழுத்த வலையமைப்பின் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் ஐ.அ.டொலர் 34.99 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 270.5 கிமீ நீளமுள்ள 33 kv கோபுர கம்பிகள் மற்றும் 13 எண்ணிக்கையான 33 kv - gantries ஐ நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2016 இன் 3 ஆம் காலாண்டில் வழங்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்த நடவடிக்கைகள் 2017 இன் 4 ஆம் காலாண்டில் தொடங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. | ஒப்பந்தம் 2019 மே 30 இல் ஐ.அ.டொலர் 40.48 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டதுடன் இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் திகதி 2019 யூலை 06 ஆகும். | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் வழங்குவதற்கு பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 2½ ஆண்டுகளுக்கும் மேற்பட்டிருந்ததுடன் பொதி 4 இன் செயற்பாடுகளை தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 3 ஆண்டுகளுக்கும் மேற்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்றுநோய் மற்றும் மோசமான வானிலை காரணமாக ஒப்பந்ததாரரின் செயலாற்றல் குறிப்பிடத்தக்களவு குறைவாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. | மேலதிக தாமதமின்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பரிமாற்ற முறைமையில் எதிர்வினை மின்சக்தி முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் | ஒப்பந்தம் 2017 இன் 1 ஆம் காலாண்டில் வழங்கப்பட வேண்டியதுடன் நடவடிக்கைகள் 2018 இன் 2 ஆம் காலாண்டில் தொடங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. | | | | |
| | | பகுதி 1: பன்னிபிட்டிய | ஐ.அ.டொலர் 1.5 மில்லியன், | செயற்திட்ட நிர்வாகக் | முற்பணக் கொடுப்பனவு | மேலதிக தாமதமின்றி |

| | | | | |
|---|---|---|---|---|
| மின்விநியோக உப மின்நிலையத்தில் 100 MVAr Breaker Switched Capacitor ஐ நிறுவுதல் | யூரோ 3.76 மில்லியன், ரூபா 166.05 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2019 மே 9 இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த செயற்பாடுகள் 2019 ஆகஸ்ட் 01 இலேயே தொடங்கப்பட்டன. | கையேட்டின் பிரகாரம் வழங்குவதற்கு பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 2 ஆண்டுகளுக்கும் மேற்பட்டிருந்ததுடன் செயற்பாடுகளை தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்கும் மேற்பட்டிருந்தது. | மற்றும் LCs ஐ நிறுவுதல் போன்ற முன்நிபந்தனைகளை பூர்த்தி செய்த பின்னர் நடைமுறைக்கு வரும் திகதி வழங்கப்பட்டது. மதிப்பீட்டிற்கும் கூறுவிலையில் வழங்கப்பட்ட விலைக்கும் இடையே அதிக வேறுபாடு காரணமாக இந்த ஒப்பந்தம் தீவிரமான பேச்சுவார்த்தைகளில் உள்ளது. | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| பகுதி 2: பியகம மின்விநியோக உப மின்நிலையத்தில் Static Var முறைமைகள் (SVS) | ஒப்பந்தம் 2020 மே 28 இலேயே வழங்கப்பட்டது. ஒப்பந்த செயற்பாடுகள் 2020 ஒக்தோபர் 08 இல் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பட்டியலிடப்பட்ட திகதியை விட மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தது. | ஒப்பந்தம் 2020.03.28 இல் வழங்கப்பட்ட போதிலும் ஒப்பந்தம் 2020.07.07 இல் கைச்சாத்திடப்பட்டதுடன் இது 2020.10.08 முதல் அமலுக்கு வந்தது. | மேலதிக தாமதமின்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 2,592 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18 மில்லியன் பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உரிய இலக்குகளில் 42.56 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,103.17 மில்லியன் தொகை மாத்திரமே அத் திகதியிலுள்ளவாறு அடைந்துகொள்ளப்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்றுநோய் மற்றும் மோசமான வானிலை காரணமாக ஒப்பந்ததாரரின் செயலாற்றல் கணிசமானளவு குறைவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்ட இலக்கை அடைந்துகொள்ள முடியவில்லை. | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி இலக்குகள் பின்பற்றப்பட வேண்டும். |

### 3.4 தீர்வு காணப்படாத முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | குறைபாட்டு பொறுப்பு கால நட்டங்களை கோருவதற்கு செயற்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் விநியோகப் பிரிவு 02 ஆல் குறைபாட்டு பொறுப்பு கால நட்டங்கள் கோரப்பட்டிருந்தன, ஒப்பந்ததாரர்களுடனான இணக்கமான பேச்சுவார்த்தைகளின் காரணமாக தாமதம் ஏற்பட்டது. | ஒப்பந்ததாரர்களிடம் இருந்து குறைபாட்டு பொறுப்பு கால நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட இருப்பு மீதிகளை மாகாண களஞ்சியங்களில் இனங்காண முடியவில்லை. | கோரப்பட்டவாறு சரக்கு மீதிகளை சரிபார்த்து, தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு விநியோக பிரிவு 02 ஆல் அறிக்கையொன்று அனுப்பப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட இருப்பு மீதிகள் இனங்காணப்பட வேண்டும். |
| (இ) | கடன்கொடுத்தோரின் நீண்டகால நிலுவை மீதிகள் | 2021 ஆம் ஆண்டில் குறைபாட்டு பொறுப்பு கால நட்டங்களை கோருவதன் மூலம் விநியோகப் பிரிவு 02 ஆல் நீண்டகால நிலுவை மீதிகள் தீர்வு செய்யப்பட்டன. | கடன்கொடுத்தோர் மீதிகள் அவ்வப்போது கணக்கிணக்கம் செய்யப்பட வேண்டும். |

### 3.5 வழமைக்கு மாறான செயற்பாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் 2016 முதல் 2020 வரையிலான காலப்பகுதியின் போது கடன் பெறுவனவுகளிலிருந்து ரூபா 20.3 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்திருந்த 18 மோட்டார் வாகனங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் மீதமுள்ள 18 மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவம் ஒப்பந்ததாரர்களின் பெயரில் இருந்தது. மேலும், மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவத்தை அமுல்ப்படுத்தும் முகவரிற்கு மாற்றுவதற்கும் அதன் தரவுத்தளத்தை பேணுவதற்கும் செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கை மற்றும் சீஈபீ/பிஎம்யூ/எஸ்ஈஎஸ்ஆர்ஐபி/2017/ஐசீபீ/01 ஆம் இலக்க கேள்வி ஆவணத்தின் கேள்விகோரல் என்பவற்றின் பிரகாரம் இந்த வாகனம் ஒப்பந்ததாரரால் வழங்கப்பட வேண்டும். ஆகையால் SESRI செயற்திட்டத்தின் PMU (பொதி 4, 5 & 6) வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அல்லது நேரடியாக கொள்வனவு செய்வதற்கான அதிகாரத்தை கொண்டிருக்காததுடன் அங்கீகார கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் பிரதி இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | இலங்கை மின்சார சபைக்கு ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதற்கு ஒப்பந்த ஆவணங்களின் உட்பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | PMU 3 (ராஜகிரிய) இற்கு ஒதுக்கப்பட்ட 2020 சனவரி 28 இல் கடன் பெறுவனவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஒரு Audi மோட்டார் கார் நிதி நிலைமை கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை, ஏனெனில் உரிமைத்துவம் இன்னும் ஒப்பந்ததாரரிடமே உள்ளது. | அந்த வாகனங்கள் 2020.12.31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களிற்கு WIP ஆக கொண்டு வரப்பட்டுள்ளன. செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு அவை CEB இடம் கையளிக்கப்பட்டதும் நிதிக்கூற்றுக்களின் PPE இன் கீழ் அவற்றை நாம் இனங்கண்டு கொள்ள முடிவதுடன் அதன் பின்னர் பெறுமானத்தேய்வை தொடங்குவோம். | இலங்கை மின்சார சபைக்கு ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதற்கு ஒப்பந்த ஆவணங்களின் உட்பிரிவு உருவாக்கப்பட வேண்டும். |